## பாடம் - 2. இன்பத்தமிழ் கல்வி

**பாடம் : தமிழ்**

**வகுப்பு : VII**

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1.பெண்களுக்கு நிகராகப் பாரதிதாசன் கூறுவது ................

**அ) மயில்** ஆ) குயில் இ) கிளி ஈ) அன்னம்

2. பின்வருவனவற்றுள் 'மலை'யைக் குறிக்கும் சொல

**அ) வெற்பு** ஆ) காடு இ) கழனி ஈ) புவி

3. 'ஏடெடுத்தேன்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது, ..................

அ) ஏடே + தேன் ஆ) ஏட்டு + எடுத்தேன்

**இ) ஏடு + எடுத்தேன்** ஈ) ஏ + டெடுத்தேன்

4.'துயின்றிருந்தார்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................

**அ) துயின்று + இருந்தார்** ஆ) துயில் + இருந்தார்

இ) துயின்றி + இருந்தார் ஈ) துயின் + இருந்தார்

5. என்று + உரைக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது ...............

அ) என்று உரைக்கும் ஆ) என்றிரைக்கும்

இ) என்றரைக்கும் **ஈ) என்றுரைக்கும்**

### ஆ.பொருத்துக.

1. கழனி - வயல்
2. நிகர் - சமம்
3. பரிதி - கதிரவன்
4. முகில் - மேகம்

### இ. குறுவினா

**1. பாரதிதாசனின் மனதைக் கவர முயன்ற இயற்கைப் பொருள்கள் யாவை?**

1. நீரோடை 2. தாமரை 3. காடு 4. வயல் 5. மேகம்
6. தென்றல் 7. மயில் 8. அன்னம் 9. கதிரவன்

**2. தமிழ் மொழிக்கல்வி பயில்வதால் உண்டாகும் நன்மைகள் எவையெனப் பாரதிதாசன் குறிப்பிடுகின்றார்?**

1. தமிழ்நாட்டு மக்களின் அறியாமை தூக்கம் களையும்,
2. வாழ்வில் துன்பங்கள் நீங்கும்,
3. நஞ்சில் தூய்மை உண்டாகும், வீரம் வரும் ஆகியவற்றைத் தமிழ் மொழிக்கல்வி பயில்வதால் உண்டாகும் நன்மைகளாகப் பாரதிதாசன் குறிப்பிடுகின்றார்.

### ஈ. சிறுவினா

**1. 'இன்பத்தமிழ்க் கல்வி' - பாடலின் மையக்கருத்தை நும் சொந்த நடையில் எழுதுக.**

பாரதிதாசன் கவிதை எழுத ஏட்டினை எடுத்தார். வானம் தன்னைக் கவிதையாக

எழுதும்படிக் கூறியது. நீரோடை, தாமரை, காடு, வயல், மேகம் ஆகியன அவரைக் கவர்ந்து தங்களைக் கவிதை எழுதும்படி அவரிடம் வேண்டியது.மயில் போன்ற பெண்கள் அன்பைக் கவிதையாக எழுதும்படிக் கூறினர். தென்றல், மயில், அன்னம், கதிரவன். வீரர்கள் ஆகியனவும் அவரிடம் கவிதை எழுத வேண்டின.

ஆனால் துன்பத்தில் கிடக்கும் தமிழ்நாட்டு மக்கள் அறியாமையில் தூங்கிக் கொண்டு இருக்கின்றார்கள். அதனை நீங்க இன்பத்தமிழ்க் கல்வி கற்க வேண்டும். இந்த நிலை ஏற்பட்டால் வாழ்வில் துன்பம் நீங்கும். மனதில் தூய்மை உண்டாகும். வீரம் வரும்.

**உ. சிந்தனை வினா**

**1. தமிழ் மொழிக்கல்வி பயில்வதால் ஏற்படும் நன்மைகளாக நீங்கள் கருதுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

- எளிதில் பொருள் விளங்கி நன்கு பாடப்புரிதல் ஏற்படும்.
- பழந்தமிழ் கலை, பண்பாடு, மரபு ஆகியன காக்கப்படும்.
- தொன்மையையும் வரலாற்றையும் நன்கு உணரலாம்.
- விழுமிய தமிழ்ச்சிந்தனைகளை அறியலாம்.

## அழியாச் செல்வம்

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஒருவர் தம் குழந்தை களுக்குச் சேர் த்து வைக்க வேண்டிய செல்வம் _____.
   அ) வீடு **ஆ) கல்வி** இ) பொருள் ஈ) அணிகலன்

2. கல்வியைப் போல் _____ செல்வம் வேறில்லை .
   அ) விலையில்லாத **ஆ) கேடில்லாத**
   இ) உயர்வில்லாத ஈ) தவறில்லாத

3. ‘வாய்த்தீயின்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.
   **அ) வாய்த்து + ஈயின்** ஆ) வாய் + தீயின்
   இ) வாய்த்து +தீயின் ஈ) வாய் + ஈயின்

4. ‘கேடில்லை ‘ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.
   அ) கே டி + இல்லை ஆ) கே + இல்லை
   இ) கேள்வி + இல்லை **ஈ) கேடு + இல்லை**

5. எவன் + ஒருவன் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.
   அ) எவன்ஒருவன் ஆ ) எவன்னொருவன்
   **இ) எவனொருவன்** ஈ) ஏன்னொருவன்

**ஆ. குறுவினா**

**1. கல்விச் செல்வத்தின் இயல்புகளாக நாலடியார் கூறும் செய்திகளை எழுதுக.**

கல்வியைப் பொருள் போல் வைத்திருப்பினும் அது பிறரால் கொள்ளப்படாது. ஒருவற்கு வாய்க்கும் படி கொடுத்தாலும் குறைவுபடாது :

மிக்கச் சிறப்பினை உடைய அரசராலும் கவா முடியாது போன்ற இயல்புகளைக் கொண்டது.

**இ. சிறுவினா**

**1. கல்விச் செல்வம் குறித்து நாலடியார் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

- கல்வியைப் பொருள் போல் வைத்திருப்பினும் அது பிறரால் கொள்ளப்படாது. ஒருவற்கு வாய்க்கும்படி கொடுத்தாலும் குறைவுபடாது. மிக்கச் சிறப்பினை உடைய அரசராலும் கவர முடியாது.
- ஆதலால் ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் கல்வியே ஆகும்.
- மற்றவை செல்வம் ஆகாது என்பன நாலடியார் கூறும் கருத்துகளாகும்

**ஈ. சிந்தனை வினா**

**1. ‘கல்விச் செல்வம் அழியாத செல்வம் எனப்படுவது ஏன்?’ - சிந்தித்து எழுதுக.**

- ஒரு மனிதன் தம்முடன் அனைத்துச் செல்வங்களையும் வைத்திருந்தாலும் அவனுக்கு கல்வியில்லையேல் அனைத்துச் செல்வங்களும் அழிந்து விடும். ஆனால் அழியாத ஒரு செல்வம் கல்விச் செல்வம் மட்டுமே
- கற்றவன் எந்த இடத்திற்குச் சென்றாலும் அவன் பிற சமூகத்தால் மதிக்கப்படுகின்றான். இதற்குக் காரணம் அவன் கற்ற கல்வியே. கற்றவனுக்கு தனது நாடும் ஊருமே அல்லாமல் எந்த நாடும் ஊரும் தன்னுடைய ஊராகும்.
- கல்வி, தொழிலுக்கு வழிகாட்டுகிறது. கல்வி என்பது வாழ்க்கை வாழ்வதற்காக உதவும் கருவியாகும். அறிவியலும் சமூகமும் வாழ்நாள் முழுவதும் தொடரும் கருவியாகும். கல்வி கற்றவரிடம் ஒழுக்கம், பண்பு, நேர்மை, நீதி இவைகள் அனைத்தும் ஒருங்கே அமைந்து காணப்படும். எனவே கல்வியானது ஒரு மனிதனின் முக்கியத் தேவையாக இருக்கிறது. எந்தவொரு சமூகமும் கல்வி இல்லாமல் இவ்வுலகில்லை.
- கல்வி கற்றவன் ஒழுக்கமாகவும், திறமையாகவும், அறிவாளியாகவும் சமுதாயத்தால் மதிக்கப்படுவனாக இருப்பான். எனவே என்றுமே அழியாத செல்வம் கல்வி மட்டுமே.

## உரைநடை - வாழ்விக்கும் கல்வி

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. காலத்தின் அருமையை க் கூறும் திருக்குறள் அதிகாரம் ______.

அ) கல்வி  **ஆ) காலமறிதல்**  இ) வினையறிதல்  ஈ) மடியின்மை

2. கல்வியில்லாத நாடு ________ வீடு.

அ) விளக்கில்லாத ஆ) பொருளில்லாத

இ) கதவில்லாத ஈ) வாசலில்லாத

3. ‘பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்’ என்று பாடியவர் ________.

அ) திருக்குறளார் ஆ) திருவள்ளுவர் இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்

4. ‘உயர்வடைவோம்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) உயர் + வடைவோம் ஆ) உயர் + அடைவோ ம்

இ) உயர்வு + வடைவோம் ஈ) உயர்வு + அடைவவோம்

5. இவை + எல்லா ம் என்பதனைச் சேர்த்தெ ழுதக் கிடைக்கும் சொல் _______.

அ) இவை எல்லாம் ஆ) இவையெல்லாம்

இ) இதுயெல்லாம் ஈ) இவயெல்லாம்

## ஆ. சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. செல்வம் - கல்விச் செல்வமே ஒருவன் பெற வேண்டிய சிறந்த செல்வம்.
2. இளமைப்பருவம் - கல்வி கற்பதற்கு ஏற்ற பருவம் இளமைப்பருவம்.
3. தேர்ந்தெடுத்து - நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படித்திட வேண்டும்

## இ. குறுவினா

**1. மனிதப் பிறவிக்கும் பிற உயிரினங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு யாது?**

உலகிலுள்ள உயிரினங்களுள் மனிதப் பிறவிக்கு மட்டுமே தனித்தன்மை உண்டு ஏனெனில் எதிர்காலத்தைப் பற்றி அறிய இயலாத அருமையான பிறவியே மனிதப் பிறவி மற்ற உயிரினங்கள் எதிர்காலத்தில் இவ்வாறுதான் இருக்கும் என்பதில் எந்த மாற்றமும் ஏற்படாது. ஆனால் மனிதனின் நிலையோ மாற்றம் நிறைந்தது

**2. கல்வி அறிவு இல்லாதவர்கள் பற்றி வள்ளுவர் கூறுவது யாது?**

- கல்வி அறிவு இல்லாதவர்களை விலங்கோடு ஒப்பிடுகிறார் வள்ளுவர்.
- விலங்குகள் நல்ல செயல்களைத் தாமாகச் செய்வதில்லை.
- அதுபோல கல்வியறிவு இல்லாதவர்கள் நல்லனவற்றைச் செய்வதில்லை என்கிறார்.

**3. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?**

படிக்க வேண்டிய நூல்களை ஆழ்ந்து ஆராய்ந்து படிக்க வேண்டும் என்பதே வள்ளுவர் கூறும் கருத்தாகும்.

## ஈ. சிறுவினா

**1. கல்வியே அழியாத செல்வம் என்பதை விளக்குக.**

- இவ்வுலகில் உள்ள செல்வங்கள் அனைத்து அழியும் தன்மையுடையன: என்றுமே அழியாத செல்வம் கல்விச் செல்வம் ஆகும்.
- அள்ள அள்ளக் குறையாதது, அழிக்கவே முடியாதது அழியாப்புகழைத் தருவது கல்விச் செல்வமே.

- கல்விச் செல்வம் கற்கும் போது கசக்கும்; கற்ற பின் கரும்பாய் இனிக்கும். வாழ்வில் ஏற்றத்தைக் கொடுக்கும்.

இத்தகைய செல்வத்தை என்றும் போற்றிக் காத்திடக் கசடறக் கற்றிடுவோம்.

**2. கல்வியையும் விளக்கையும் திருக்குறளார் எவ்வாறு ஒப்பிடுகிறார் ?**

- விளக்கானது தன்னையும் தன்னைச் சுற்றியுள்ள இடத்தையும் ஒளி வீசச் செய்கிறது.
- அதுபோல கல்வி ஓர் ஒளி விளக்கு, அவ்விளக்கானது; தான் இருக்கும் இடத்தை ஒளிமயமாக மாற்றுகிறது. எனவே ஒருவன் கற்ற கல்வி பலருக்கும் பயன்தர வேண்டும்.
- கல்வியில்லாத நாடு விளக்கில்லா வீடு போன்றது. விளக்கில்லா வீட்டில் குடியிருக்க யாரும் விரும்பாததைப் போலவே, கல்வியில்லாத குடும்பத்தை யாரும் மதிப்பதில்லை.

நன்மதிப்பைத் தந்து நல்வழியில் வாழச் செய்யும் கல்வியைக் கற்று, கலங்காமல் வாழ்வோம்

### உ. சிந்தனை வினா

**1. நல்ல நூலின் இயல்புகளாக நீங்கள் கருதுவன யாவை?**

- கருத்துகளை எளிய நடையில் எடுத்துரைத்தல்.
- கூற வந்த செய்தியைச் சுருக்கமாகக் கூறி விளங்க வைத்தல்.
- படிப்பவர்கள் விரும்பிப் படிக்கும் வண்ண ம் இனிய நடையில் இருத்தல்.
- கருத்தாழம் மிக்கதாக இருத்தல் வேண்டும்.
- பயனற்றதை விடுத்து பயனுள்ள கருத்தைத் தருதல்.
- சிறு சிறு கதைகள், எடுத்துக்காட்டுகள் அளித்தல்.
- சான்றோர்களின் கருத்தை மேற்கோள் காட்டுதல்.
- சமுதாயத்திற்கேற்றபடி இருத்தல்.
- இன்றைய சூழலுக்குத் தக்கபடி கருத்தளித்தல்.

## விரிவானம் - பள்ளி மறுதிறப்பு

**1. மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.**

மதிவாணன் கோடை விடுமுறையில் நாலைந்து நாள்கள் அக்கா வீடு, அத்தை வீடு என்று சென்று வந்தான். தொலைக்காட்சியைப் பார்த்துப் பொழுதுபோக்கினான்.

மதிவாணனின் நண்பன் கவின், "சும்மாதானே இருக்கே. வாடா பின்னலாடை நிறுவனத்துக்குப் போகலாம். புதிய உடைகள், எழுதுகோல்கள், குறிப்பேடுகள் வாங்கப் பணம் சம்பாதித்து விடுவாய்" என்றான். மதிவாணனும் சேர்ந்துவிட்டான்.

ACADEMY MATRIC. Hr. SEC. SCHOOL HOSAVAPATTI KNOWLEDGE IS POWER

மதிவாணனுக்குப் புதிய அனுபவம் கிடைத்தது. சனிக்கிழமை வாரச் சம்பளம் கிடைத்தது. மேலும் வடை, தேநீர், இரவில் பரோட்டா, தோசை என்று சாப்பிட முடிந்தது.

வாழ்க்கை முழுவதும் தொழிலாளியா? எனச் சிந்தித்தான். தொழிலாளியாக இருப்பது கேவலமில்லை. ஆனால் படிக்கிற வயதில் வேலை தேவையா? எனச் சிந்தித்தான்.

படித்தால் வேறு வேலை கிடைக்கும். நல்ல வருமானம் வரும் எனத் தோன்றியது. கல்வியறிவு முதன்மையானது. ஒரு பட்டமாவது வாங்கவேண்டும் என எண்ணினான். அப்துல்கலாமும் அம்பேத்கரும் இருந்த விளம்பரப் பலகை கண்ணில் பட்டது. அவர்களைப் போல் உயர வேண்டுமெனில் படிக்க வேண்டும் என உணர்ந்தான்.

மதிவாணன் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்த போது படிப்பறிவில்லாத முதியவர் ஒருவர், அங்கு வந்து நின்ற பேருந்து நல்லூர் போகுமா?" என்று கேட்டார். ஒரு சிறுவன் பேருந்தின் முகப்பைப் பார்த்தான். எதுவும் பேசாமல் புன்முறுவல் பூத்தான்.

"என்னப்பா போகுமா?" என்று மீண்டும் கேட்டார். "யாருக்குத் தெரியும்? எங்களுக்குப் படிக்கத் தெரியாதே" என்று கூறியபடி ஒரு சிறுவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான். பெரியவர் "இதுகூட படிச்சுச் சொல்லத் தெரியாதா?" என்றார். ஒரு சிறுவன் பெரியவரே. இதப் படிக்கக் கூட உங்களுக்குத் தெரியாதா?" என்றான். மற்றவர்கள் சிரித்தனர். மதிவாணன் அப்பெரியவரிடம் "பேருந்து வந்தா சொல்றேன்" என்றான்.

முதியவர் கல்வியறிவு இல்லாததால் அவமானப்பட்டதைக் கவனித்தான். கல்வியறிவு இல்லையெனில் தானும் இவ்வாறு அவமானப்பட நேரும் என்ற எண்ணம் வந்தது.

நல்ல கல்வியறிவு தலைநிமிர்ந்து நிற்க வைக்கும். நல்ல படிப்புதான் சிறந்த மனிதனாக்கும் என்பதை உணர்ந்தான். வேலைக்குப் போவதை விடுத்துப் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்தான்.

## ஓரெழுத்து ஒருமொழி, பகுபதம், பகாப்பதம்

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நன்னூலின்படி தமிழிலுள்ள ஓரெழுத்து ஒருமொழிகளின் எண்ணிக்கை _______.
   அ) 40 **ஆ) 42** இ) 44 ஈ) 46
2. 'எழுதினான்' என்பது _______.
   அ) பெயர்ப் பகுபதம் **ஆ) வினைப் பகுபதம்**
   இ) பெயர்ப் பகாப்பதம் ஈ) வினைப் பகாப்பதம்
3. பெயர்ப்பகுபதம் _______ வகைப்படும்.
   அ) நான்கு ஆ) ஐந்து **இ) ஆறு** ஈ) ஏழு

4. காலத்தை க் காட் டும் பகுபத உறுப்பு ______.

அ) பகுதி ஆ) விகுதி **இ) இடைநிலை** ஈ) சந்தி

**ஆ. பொருத்துக.**

1. பெயர்ப் பகுபதம் - பெரியார்
2. வினைப்பகுபதம் - வாழ்ந்தான்
3. இடைப் பகாப்பதம் - மன்
4. உரிப் பகாப்பதம் - நனி

**இ. சரியான பகுபத உறுப்பை எழுதுக.**

**1. போவாள்=போ+வ்+ஆள்**

போ = பகுதி
வ் = எதிர்கால இடைநிலை
ஆள் = பெண்பால் வினைமுற்று பகுதி

**2. நடக்கின்றான் = நட+க்+கின்று+ஆன்**

நட = பகுதி
க் = சந்தி
கின்று = நிகழ்கால இடைநிலை
ஆன் = ஆண்பால் வினைமுற்று பகுதி

**3. பார்த்தான் =பார்+த்+த்+ஆன்**

பார் = பகுதி
த் = சந்தி
த் = இறந்தகால இடைநிலை
ஆன் = ஆண்பால் வினைமுற்று பகுதி

**4. பாடுவார் = பாடு+வ்+ஆர்**

பாடு = பகுதி
வ் = எதிர்கால இடைநிலை
ஆர் = பலர்பால் வினைமுற்று பகுதி

**ஈ. குறுவினா**

**1. ஓரெழுத்து ஒருமொழி என்றால் என்ன?**

ஓர் எழுத்தே பொருள் தரும் சொல்லாக அமைவது ஓரெழுத்து ஒருமொழி ஆகும். எ.கா. பூ

**2. பதத்தின் இருவகைகள் யாவை?**

பகுபதம், பகாப்பதம் என பதம் இருவகைப்படும்.

**3. பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை?**

பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும். அவையாவன : பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம்.

**உ. சிறுவினா**

**1. விகுதி எவற்றைக் காட்டும்?**

- திணை
- பால்
- முற்று
- எச்சம்

**2. விகாரம் என்பது யாது? எடுத்துக்காட் டுடன் விளக்குக.**

பகுதி, விகுதி, சந்தி, இடைநிலை முதலியவற்றில் ஏற்படும் மாற்றம் விகாரம் எனப்படும்.

(எ.கா.) வந்தனன் - வா(வ) + த்(ந்) + த் +அன் +அன்

வா - பகுதி, இது 'வ' எனக் குறுகி இருப்பது விகாரம்.

த் - சந்தி, இது 'ந்' எனத் திரிந்து இருப்பது விகாரம்.

த் - இறந்தகால இடைநிலை

அன் - சாரியை

அன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

**3. பெயர்ப்பகுபதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை ?**

பெயர்ப்பகுபதம் ஆறு வகைப்படும். அவையாவன:

1. பெயர்பெயர்ப்பகுபதம்
2. இடப்பெயர்ப்பகுபதம்
3. காலப்பெயர்ப்பகுபதம்
4. சினைப்பெயர்ப்பகுபதம்
5. பண்புப்பெயர்ப்பகுபதம்
6. தொழில் பெயர்ப்பகுபதம்

## மொழியை ஆள்வோம்

**அ. கீழ்க்காணும் சொற்களை அறுவகைப் பெயர்களை வகைப்படுத்துக.**

நல்லூர், வடை, கேட்டல், முகம், அன்னம், செம்மை, காலை, வருதல், தோகை , பாரதிதாசன், பள்ளி, இறக்கை, பெரியது, சோலை, ஐந்து மணி, விளையாட்டு, புதன்

| பொருள் | இடம் | காலம் | சினை | குணம் | தொழில் |
|---|---|---|---|---|---|
| வடை<br>அன்னம்<br>பாரதிதாசன் | நல்லூர்<br>சோலை<br>பள்ளி | காலை<br>புதன்<br>ஐந்து மணி | முகம்<br>தோகை<br>இறக்கை | செம்மை<br>பெரியது | கேட்டல்<br>வருதல்<br>விளையாட்டு |

**ஆ. சரியான சொல்லைக் கொண்டு நிரப்புக.**

(அது, நீ, அவர்கள், அவைகள், அவை, நாம், என், உன்)

1. உன் பெயர் என்ன?
2. நாம் ஏழாம் வகுப்பு மாணவர்கள்.
3. அவை எப்படி ஓடும்.
4. நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்.
5. அவர்கள் வந்து கொண்டு இருக்கிறார்கள்.

**இ. பின்வரும் தொடர்களில் மூவிடப்பெயர்களை அடிக்கோடிடுக. அவற்றை வகைப்படுத்துக.**

1. எங்கள் வீட்டு நாய்க்குட்டி ஓடியது.
2. இவர்தான் உங்கள் ஆசிரியர்.
3. நீர் கூறுவது எனக்குப் புரியவில்லை .
4. எனக்கு, அது வந்ததா என்று தெரியவில்லை. நீயே கூறு.
5. உங்களோடு நானும் உணவு உண்ணலாமா?

| தன்மை | முன்னிலை | பட ர்க்கை |
|---|---|---|
| எங்கள், எனக்கு ,நானும் | நீர்,உங்கள்,உங்களோடு | இவர் , அது |

**ஈ. கடிதம் எழுதுக**

1. உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத்தர வேண்டி நூலக ஆணை யருக்குக் கடிதம் எழுதுக.

**நூலகம் அமைத்துத் தர வேண்டி மடல்**

**அனுப்புநர்**

ச.முகிலன்,
கண்ணன்
பாரதிநகர்,
ஈரோடு.

**பெறுநர்**

உயர்திரு ஆணையர் அவர்கள்,
பொதுநூலகத் துறை,
சென்னை - 600 002.

**மதிப்பிற்குரிய ஐயா,**

பொருள் : நூலகம் அமைத்துத் தர வேண்டுதல்.

வணக்கம். எங்கள் பாரதி நகர் ஈரோட்டின் மையப் பகுதியை ஒட்டியே உள்ளது. இங்கு சுமார் 500 குடும்பங்கள் உள்ளன. 3000 மக்கள் வாழ்கின்றனர். பள்ளி, கல்லூரி செல்வோர் மற்றும் பட்டதாரி இளைஞர்கள் 1000 பேர் உள்ளனர். பொழுதைப் பயனுள்ள வகையில் கழிக்க எங்கள் பகுதியில் நூலகம் இல்லை . அறிவை வளர்த்துக் கொள்ளவும், உலக நடப்புகளை

AKSHAYA ACADEMY MATRIC. Hr. Sec. SCHOOL KOSAVAPATTY KNOWLEDGE IS POWER

அறியவும் எங்களால் இயலவில்லை .எனவே எங்கள் அறிவுக் கண்களைத் திறக்க எங்கள் பகுதியில் நூலகம் அமைத்துத் தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம். நன்றி பல.

இப்படிக்குத் தங்கள் உண்மையுள்ள,
ச.முகிலன்.

இடம் : ஈரோடு.
உறைமேல் முகவரி
பெறுநர்
ஆணையர் அவர்கள்,
பொதுநூலகத் துறை,
சென்னை - 600 002.

## மொழியோடு விளையாடு

**அ. கீழே உள்ள குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டத்தில் எழுத்துகளை நிரப்புக.**

1. காலையில் பள்ளி மணி **ஒலிக்கும்**
2. திரைப்படங்களில் விலங்குகள் **நடிக்கும்** காட்சி குழந்தைகளுக்குப் பிடிக்கும்.
3. கதிரவன் காலையில் கிழக்கே **உதிக்கும்**
4. நாள்தோறும் செய்தித்தாள் **வாசிக்கும்** வழக்கம் இருக்க வேண்டும்.

**ஆ. ஓர் எழுத்துச் சொற்களால் நிரப்புக.**

1. **ஆ** புல் மேயும்.
2. **தீ** சுடும்.
3. **கை** பேசும்.
4. **ஈ** பறக்கும்.
5. **பூ** மணம் வீசும்.

**இ. பின்வரும் எழுத்துகளுக்குப் பொருள் எழுதுக.**

(எ.கா) தா – கொடு

1. தீ **நெருப்பு**
2. பா **பாடல்**
3. கை **தைத்தல்**
4. வை **புல்**
5. மை **அஞ்சனம்**